DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C. No.404/ 2020 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 2 |
| Name | : தீபக்பாண்டி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.11.2024.

--------

1 மற்றும் 4வது எதிரி ஆஜர், 2, 3 எதிரிகள் இறந்துவிட்டதால் குற்றச்சாட்டு அற்றுவிட்டது.

**முதல் விசாரணை:**

நான் தற்போது நக்கலப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். சம்பவத்தின்போது நான் வேல்முருகன் பேருந்தின் செக்கராக வேலை பார்த்தேன். கடந்த 27.10.2018ம் தேதி மதியம் 1.40 மணிக்கு உசிலம்பட்டி பேருந்து நிலையத்தில் சதர்ன் பேருந்து, எங்கள் பேருந்து அனுமதிக்கப்பட்ட நேரத்திற்கு முன்பாக முந்தி சென்றதால் எதற்காக நேரம் மாறி எங்கள் பேருந்திற்கு முன்னால் செல்கிறீர்கள் என்று அழகரிடம் கேட்டோம். அதற்கு அவா் நாங்கள் அப்படி தான் செல்வோம், முடிந்ததை பார்த்துக்கொள்ளுங்கள் என்றும், நாளை மதியம் பார்த்துக்கொள்ளலாம் என சொல்லிவிட்டு சென்றார். மறுநாள் 28.10.2018ம் தேதி 1.40 மணிக்கு உசிலம்பட்டி, பேருந்து நிலையத்தில் அழகர், முத்து, முத்தையா, செல்வகுமார் ஆகியோர்கள் வந்து டிரைவர் ஜெயராமிடம் நேற்று பேசினாய், இன்று பேசு என சத்தம் போட்டார்கள். உடனே ஜெயராமன் பேருந்தை விட்டு இறங்கி சென்றார். அப்போது

அழகா் ஜெயராமை டிரைவா் சீட்டில் வைத்திருந்த கத்தியை வைத்து இடது பக்க இடுப்புக்கு மேலே குத்தினாா். அப்போது நான் விலக்க சென்றபோது அதே கத்தியை வைத்து அழகா் எனது வயிற்றில் குத்தினாா். ஆட்கள் வந்து பிடிக்க முயற்சி செய்தாா்கள், அழகா் கத்தியை காட்டி அவா்களை மிரட்டினாா். என்னையும், டிரைவா் ஜெயராமையும் எங்கள் நடத்துநா், ஓட்டுநா்கள் உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சோ்த்தாா்கள். அப்போது போலீசாா் அங்கு வந்து வாக்குமூலம் பெற்றாா்கள். என்னிடம் காட்டப்படும் கத்தி தான் அழகா் என்னை குத்த பயன்படுத்தியது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

தேனி பேருந்து நிலையத்தில் முதல் நாள் வாய்தகராறு ஏற்பட்டது என்றால் சரிதான். நாங்கள் 3 பேரும், 1வது எதிரியும், நடத்துநரும் இருந்தாா்கள். 2வது நாள் பயணிகளை ஏற்றும்போது பிரச்சினை வந்ததா என்றால் ஏற்றுவதற்கு முன்பாகவே எதிரி வந்துவிட்டாா். அவா்களும் பேருந்தும் நின்றுக்கொண்டிருந்தது. அன்றைய தினம் பணியில் இல்லை, இறங்கிவிட்டாா். சம்பவத்தின்போது நான் பேருந்தின் பின்புற படிக்கட்டில் நின்றுகொண்டிருந்தேன். மேற்படி சம்பவம் சுமாா் 15 நிமிடம் நடைபெற்றது. ஜெயராம் பேருந்தை விட்டு சென்றவரை, 1வது எதிரி அழைத்தாா், அப்போது தான் சண்டை வந்தது என்றால் சரிதான். எங்கள் பேருந்திலிருந்து 10 மீட்டா் தொலைவில் இந்த சம்பவம் நடைபெற்றது. குத்துவதற்கு முன்பாகவே சண்டை போட முயற்சிக்கிறாா் என்பது தெரியவந்ததா என்றால் தெரியவந்தது. அழகா், அ.சா.1யை குத்தியவுடன் நான் விலக்க சென்றேன். அப்போது எனது வயிற்றில் அழகா் குத்தினாா். நாங்கள் சம்பவம் முடிந்த 15 நிமிடத்திற்குள் மருத்துவமனைக்கு சென்றுவிட்டோம். எத்தனை நிமிடத்தில் போலீசாா் வந்தாா்கள் என்றால் சரியாக தெரியவில்லை, சுமாா் 20 நிமிடங்கள் இருக்கும். என்னிடம் வாக்குமூலம் பெற்றாா்கள், கையெழுத்து வாங்கவில்லை. சம்பவத்தின்போது பேருந்து நிலையத்தில் சுமாா் 50 நபா்கள் இருந்தாா்களா என்றால் இருந்தாா்கள். சம்பவத்தின்போது 5 பேருந்துகள் பேருந்து நிலையத்தில் இருந்தன. நான் சொன்னது போன்று, சொன்ன நேரத்தில் 1வது எதிரி அ.சா.1யோ, என்னையோ கத்தியால் சொன்ன முறையில், உடம்பில் சொன்ன இடத்தில் தாக்கவில்லை என்றால் சரியல்ல. எங்களுடைய பேருந்து நடத்துநா், ஓட்டுநருக்கும், 1வது எதிரியின் பேருந்து ஓட்டுநா், நடத்துநருக்கும் பயணிகளை ஏற்றுவதில் முதல் நாளே வாய்தகராறு ஏற்பட்டதாலும், முதல் நாளே எங்களின் நேரத்திற்கு முன்பாகவே 1வது எதிரி அவா் ஓட்டி வந்த சதா்ன் பேருந்தில்

பயணிகளை ஏற்றிச் சென்றுவிட்டதால், எங்கள் இரண்டு பேருந்துகளில் நடத்துநர், ஓட்டுநர், பரிசோதகருக்கு மனவருத்தம் இருந்து வந்தது என்றும், அந்த சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் பயணிகள் ஏறிக்கொண்டிருக்கும்போது யாரோ, எப்படியோ, என்னையும், அ.சா.1யையும் தாக்கியதில் காரணமாக வைத்து எதிரி முதல் நாளே தேனி பேருந்து நிலையத்தில் தகராறு செய்ததாலும், மேலும் எங்களுடைய பேருந்து கம்பெனி பெரிய கம்பெனி என்பதாலும், எங்கள் முதலாளி தனது செல்வாக்கை பயன்படுத்தி, 1வது எதிரியின் மீது பொய்யாக கொடுக்கப்பட்ட புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் மருத்துவமனையில் சார்பு ஆய்வாளரோ, போலீசாரோ உசிலம்பட்டியில் எந்த வாக்கு மூலமும் பெறவில்லை என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல எதிரி/கள் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2024.11.07 13:34:51 +0530

உதவி அமர்வு நீதிபதி,
உசிலம்பட்டி.